JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 2 Witness for Prosecution

CC No. 133/2025 Crime No. Station Appakodal

| | | |
|---|---|---|
| Name | Pw-2- கதிர்வேல் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of September 2025 | | |

**எதிரி ஆஜர் இல்லை**

**முதல் விசாரணை**

நான் பவானி, தொட்டிபாளையத்தில் குடியிருந்து கொண்டு, சிவில் காண்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 24.03.2025-ம் தேதியன்று பகல் சுமார் 01.30 மணியளவில் நான் எனது மகள் கமலினியை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு எனது ஓலா ஸ்கூட்டரில் ஆப்பக்கூடல் to பவானி ரோட்டில் பண்டார அப்பிச்சி கோவில் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் சென்ற கார் அதிவேகமாக சென்று திடீரென பிரேக் போட்டது. திடீரென முன்னாள் சென்ற கார் நின்றதால் நான் எனது வண்டியில் பிரேக் போட்டபோது நிலை தடுமாறி முன்னாள் சென்ற காரின் மீது மோதி விட்டேன். அதில் எனது மகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. எனக்கு இடது கால் முட்டியிலும், முட்டிக்கு கீழ் எலும்பு முறிவும் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலமாக என்னை பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சத்தியமங்கலம் பழனிச்சாமி மருத்துவமனைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். விபத்து ஏற்பட்டு 3 நாட்கள் நான் சுயநினைவின்றி இருந்தேன் அப்போது என்னை கவனித்துக் கொள்வதற்காக எனது உறவினர் சிவசங்கர் மருத்துவமனையில் இருந்ததார். அதன் பின் 27/03/2025-ம் தேதியன்று அவர் பவானி காவல் நிலையம் சென்று மேற்படி விபத்து தொடர்பாக புகார் அளித்தார். மேற்படி காரை ஓட்டி வந்த நபரை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:07:30 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதியில் எனது மகளுக்கு பள்ளி தேர்வு என்றால், சரிதான். நான் எனது மகளின் தேர்வுக்கு சீக்கிரம் செல்ல வேண்டும் என்று வாகனத்தை இயக்கினேன் என்றால், சரிதான். மதியம் 02.00 மணிக்கு தேர்வு என்றால், சரிதான். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றால், சரிதான். விபத்தானது மதியம் 01.50 க்கு நடந்ததாக நான் போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றால், நான் போலீசார் விசாரணையில் விபத்து நடைபெற்ற நேரம் 01.15 முதல் 01.30 வரை இருக்கும் தான் என்று கூறினேன். நான் போலீஸ் விசாரணையில் விபத்து நடந்த நேரம் 01.50 எனக் கூறிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி கூறுகிறேன் என்றால், சரியல்ல.

விபத்து நடந்த இடத்திலிருந்து எனது மகளின் பள்ளிக்கு சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக வாகனத்திற்கு பின்னால் வருவதாக இருந்தால் 10 மீட்டர் தள்ளிதான் வரவேண்டும் என எனக்கு தெரியும் என்றால், நான் 15 மீட்டர் தள்ளி தான் வந்தேன். நான் எவ்வளவு அடி தொலைவில் வாகனத்தின் பின்னால் வந்த விவரத்தை போலீஸார் விசாரணையில் கூறவில்லை என்றால், சொன்ன மாதிரி ஞாபகம் இல்லை. பொதுவாக பிரேக் அடித்தால் வாகனத்திற்கு பின்னால் இருக்கும் சிவப்பு லைட் எரியும் என்றாலும், அதை பார்த்து நாம் தான் பத்திரமாக செல்ல வேண்டும் என்றால், சரிதான்.

எதிரி சரியான வேகத்தில், சரியான திசையில் தான் சென்று கொண்டிருந்தார் என்றாலும், நான் தான் பள்ளிக்கு செல்ல வேண்டும் என்பதால் வலது புறமாக ஏறிச் செல்வதற்கு பதிலாக இடது புறமாக ஏறி சென்று வாகனத்தின் பின்புறத்தில் மோதினேன் என்றால், சரியல்ல. நான் வாகனத்தின் இடதுபுற ஓரத்தில் மோதவில்லை என்றால், நான் மோதவில்லை. நான் வாகனத்தின் எந்த புறத்தில் மோதினேன் என்றால், வாகனத்தின் பின்புறத்தில் நடுப்பகுதியில் மோதினேன். நான் இந்த வழக்கு தொடர்பாக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இனிமேல் தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். நஷ்ட ஈடு வழக்கில் பணம் வாங்க வேண்டும் என்ற காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.. முன்னால் சென்ற வாகனத்தின் மீது எந்த தவறும் இல்லை என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:07:41 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 1 Witness
for Prosecution

CC No. 133/2025 Crime No. Station Appakodal

| | | |
|---|---|---|
| Name | Pw-1- சிவசங்கர் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of September 2025 | | |

**எதிரி ஆஜர் இல்லை**

**முதல் விசாரணை**

நான் பவானி மேற்கு தெருவில் குடியிருந்து கொண்டு, ஆடிட்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2025 ஆம் தேதியன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் எனது அலுவலகத்தில் இருந்தபொழுது எனது மாமா கதிர்வேல் என்பவர் அவரது மகள் கமலினியை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு அவரது ஓலா இருசக்கர வாகனத்தில் ஆப்பக்கூடல் to பவானி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது பண்டார அப்புச்சி கோவில் அருகில் கார் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும், அவர்களை பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளதாகவும் கேள்விப்பட்டு நான் பவானி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர் அங்கிருந்து அவர்களை மேல் சிகிச்சைக்காக சத்தியமங்கலம் பழனிசாமி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு எனது மாமா ஒரு வாரம் உள்நோயாளியாக தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார். நான் எனது மாமாவுடன்மருத்துவமனையில் அவருக்கு உதவியாக இருந்ததால் 27.03.2025 ஆம் தேதியன்று பவானி காவல் நிலையம் வந்து புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனு நான் கொடுத்தது தான். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:09:08 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரிதான். இந்த விபத்தில் அடிபட்ட நபர் எனது மாமா என்பதால் அவருக்கு நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக நான் பொய்புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:09:14 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.